செ.வெ.எண் 664 நாள் 6.8.2010

செய்தி வெளியீடு 6-8-2010

## மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் புரிய உதவும் வகையில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கும் திட்டம், செவித்திறன் குறையுடையோருக்கு விரிவுபடுத்தியும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை தளர்த்தியும் முதலமைச்சர் ஆணை - திட்டத்திற்கு ரூ 55.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு

இரு கைகள் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் புரிய உதவும் வகையில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலசவமாக வழங்கும் திட்டம் 2009-2010 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். மேலும் இத்திட்டத்தில் கீழ் பயன் பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் பின்வருமாறு தளர்த்தப்பட்டுள்ளன.

1. கல்வித் தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி என்பது முழுமையாக தளர்த்தப்பட்டுள்ளது.
2. 6 மாத தையல் பயின்றதற்கான சான்றிதழுக்கு பதிலாக தையல் தெரியும் என்பதற்கான சான்று இருந்தால் போதுமானது.
3. ரூ. 24,000/– ஆண்டு வருமானம் என்று இருந்தது தற்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை உள்ளவராகவும், 18 வயது முதல் 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தில் கீழ் 1495 பேருக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கிட ரூ. 55.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.